29—

பாலம்

***45053—திரு. எம். அன்பழகன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, பழனி ஒன்றியம், பெரியம்மாபட்டி ஊராட்சி, சண்முகம் பாறைக்கும், புளியம்பட்டிக்கும் இடையில் சுருளி ஆற்றில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

பழனி தொகுதி, பழனி ஒன்றியம், பெரியம்மாபட்டி ஊராட்சி, சண்முகம் பாறைக்கும், புளியம்பட்டிக்கும் இடையில் சுருளியாற்றில் கட்டக் கோரியுள்ள பாலமானது, திண்டுக்கல் கோட்டப் பராமரிப்பில் உள்ள பழனி—கொழுமம் சாலை கி.மீ. 3/2 முதல் சண்முகாபுரம் வழியாக சின்னகாந்திபுரம் சாலையில் 4/0 மற்றும் 8/4 கி.மீ. 8/2—ல் கட்டப்பட வேண்டியதாகும். இச்சாலை ஒருவழித்தடமான மாவட்ட இதர சாலையாகும். இவ்விடத்தில் உயர்மட்டப் பாலம் கட்ட சுமார் ரூ.60 இலட்சம் தேவைப்படும். இவ்விடத்தில் தற்போது ஐந்து கண்கள் கொண்ட தரைமட்டக் குழாய்ப் பாலம் அமையப் பெற்று நல்ல நிலையில் உள்ளது. இதன் நீர்வழிப் பாதை 12.00 மீ. ஆகும். இத்தரைமட்டக் குழாய்ப் பாலமானது நீர்வரத்துக்கு ஏற்றவகையில் உள்ளதால் தற்போது இவ்விடத்தில் உயர்மட்டப் பாலம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி தொகுதி, பழனி ஒன்றியம் பெரியம்மாபட்டி ஊராட்சிக்குட்பட்ட, புளியம்பட்டி கிராமம் மலையடிவாரத்தையொட்டிய கிராமம். இங்கே ஆதி திராவிட மக்களும், மலைவாழ் மக்களும் சுமார் 800 பேர் குடியிருந்து

2010 ஏப்ரல் 7]

வருகிறார்கள். இந்தப் பகுதியிலே ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஒன்று உள்ளது. மேலும் வனத் துறைக்குச் சொந்தமான அலுவலகமும் உள்ளது. மழைக் காலங்களிலே சண்முகம் பாறைக்கும் புளியம்பட்டிக்கும் இடையிலே சுருளியாற்றில் வெள்ளம் வந்தால், வாகனப் போக்குவரத்து நின்றுவிடுகிறது. பள்ளிக்கு ஆசிரியர் செல்ல முடியவில்லை. வனத் துறை அலுவலகத்திற்குப் பணியாளர்கள் வரமுடியவில்லை. மக்கள் மருத்துவ வசதிக்குக்கூட வெளியிலே செல்ல முடியாத சூழ்நிலையில் அது தீவு போன்று உள்ளது.

மேலும், ஆற்றின் மறுகரையில் உள்ள விவசாயத்திற்குட்பட்ட 800 ஏக்கர் விளைநிலங்களுக்கும் செல்ல முடியவில்லை. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து தற்போது உள்ள தரைமட்டப் பாலத்தைச் சற்று உயர்த்தியாவது கட்டித் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிக்கடி மழை பெய்கிற காலத்திலே மட்டும் அந்தப் பாலத்திலே அதுபோன்று ஓரிரு நாட்கள் போக்குவரத்துப் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலித்து தேவைப்படுகிறபட்சத்தில் நிதிநிலைமைகளுக்கேற்ப அந்தப் பாலத்தை உயர் மட்டப் பாலமாக மாற்றுவதற்கு அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

திரு. எம். அன்பழகன்: மிக்க நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போன ஆண்டே உள்ளாட்சித் துறையும், நெடுஞ்சாலைத் துறையும்

[2010 ஏப்ரல் 7

சேர்ந்து, பல ஆண்டுகளாக பழுதடைந்துள்ள கிராமச் சாலைகள் புதுப்பிக்க முடியாத சூழ்நிலையில் இருக்கின்றன என்ற கருத்தின் அடிப்படையில் அதை எந்தத் துறை எடுத்துக்கொள்வது அல்லது இரண்டும் இணைந்து எடுத்துக்கொள்வதா என்பதை நாங்கள் முடிவு செய்ய இருக்கிறோம்' என்று குறிப்பிட்டார்கள். தொடர்ந்து ஓராண்டு காலம் கழித்தும் அந்தப் பணிகளைத் தொடங்காமல் கிராமச் சாலைகள் பல்வேறு பகுதிகளில் 15 ஆண்டு காலம், 20 ஆண்டு காலமாக பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அதைப்பற்றி இந்த அரசு மீண்டும் நல்ல முடிவினை மேற்கொள்ளுமா என்பதை உங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—30

பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் பொறுத்த அளவில் மண் சாலைகளாக இருக்கும்பட்சத்தில் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக நபார்டு வங்கி போன்ற வங்கிகளினுடைய கடனுதவி பெற்று அவை தார்ச் சாலைகளாக மாற்றப்பட்டு வந்தன. அந்த அடிப்படையில் இந்த அரசு பொறுப்பேற்றதற்கு முன்பு, அதுபோன்ற சாலைகள் ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகவும், அதேபோல நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகவும் பராமரிக்கப்படாமல் இருந்த சூழ்நிலை இருந்ததும் உண்மை. ஆனால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு பெறுப்பேற்ற பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய சிறப்பு அனுமதியின்பேரில் அந்தச் சாலைகளைப் பொறுத்த அளவு மக்களுடைய பயன்பாட்டில் இருக்கிற காரணத்தினால் அவற்றில் துறை வேறுபாடு பார்க்காமல் அவற்றைப் பராமரியுங்கள் என்று எடுத்துரைத்து, தொடர்ந்து 3 ஆண்டு காலமாக நெடுஞ்சாலைத் துறைக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 200 கோடியும், அதேபோல ஊரக வளர்ச்சித் துறைக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 103 கோடியும் ஒதுக்கப்பட்டு அந்தச் சாலைகளெல்லாம் வேறுபாடு இல்லாமல் பராமரிக்கப்பட்டிருக்கின்றன.

2010 ஏப்ரல் 7]

மீதம் இருக்கக்கூடிய சாலைகள் இப்போது ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

திரு. என். மாலைராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருநெல்வேலி தொகுதிக்குட்பட்ட நெல்லை மாநகராட்சி 45—வது வார்டில் ஆதி திராவிட மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற மலையாளமேடு என்ற ஊருக்குச் செல்லும் சாலையில் குறுகிய பாலம் ஒன்று உள்ளது. தென்திருப்பதி என்று சொல்லப்படுகிற திருவேங்கடநாதபுரம் திருக்கோயிலுக்கு பக்தர்கள் அதிகமான எண்ணிக்கையில் சென்று வருகின்ற சாலையாக அது இருப்பதால் குறுகிய அந்தப் பாலத்தை விரிவுபடுத்தி பேருந்துகளும் சென்று வரக்கூடிய சாலையாக இந்த ஆண்டே அமைத்துத் தர அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு அமைந்த பிறகு சாலை மற்றும் பாலக் கட்டமைப்புக்கு முக்கியத்துவம் தந்து அதுபோன்ற குறுகலாக இருக்கக்கூடிய பாலங்களையும் சாலைகளுக்கேற்ப அகலப்படுத்த வேண்டும், இல்லையென்றால் விபத்துகள் ஏற்படும் என்பதை அறிந்து, போக்குவரத்துக்கு ஏற்றவகையில் அந்தச் சாலைகளுக்கு ஏற்ற அளவாவது அகலமாக இருக்கக்கூடிய வகையிலே பாலங்கள் அகலப்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற பாலத்தைப் பற்றி இந்தத் துறை பரிசீலித்து அதை அகலப்படுத்துவதற்குரிய நடவடிக்கையை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன்.

திரு. சபா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் தொகுதி, திருமாணிக்குழி பகுதியில்

கெடிலம் ஆற்றில் அமைந்துள்ள தரைப் பாலம் மழை, வெள்ளக் காலங்களில் அடிக்கடி அடித்துச் செல்லப்படுகிறது. கடந்த 2007, 2008 ஆம் ஆண்டுகளில்கூட 2 முறை அடித்துச் செல்லப்பட்டு, முறையே ரூபாய் 25 இலட்சம், 30 இலட்சம் என நெடுஞ்சாலைத் துறையால் நிதி ஒதுக்கப்பட்டு சீர் செய்யப்பட்டது. இருந்தாலும், அந்தப் பகுதியில் ஒரு மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. கடந்த 2008 ஆம் ஆண்டு வெள்ளச் சேதங்களைப் பார்வையிட வருகை தந்த மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கட்டாயம் ஒரு மேம்பாலம் அமைத்துத் தரப்படும் என்று உறுதியை அளித்துவிட்டு வந்தார்கள். எனவே, 50 கிராம மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் அந்தப் பகுதிக்கு ஒரு மேம்பாலத்தை அமைத்துத் தர மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்ற வேண்டுமென்கிற கோரிக்கை நியாயமானது. அந்த இடத்தை நான் நேரிலேயே பார்வையிட்டேன். அரசினுடைய நிதியில் பாலம் கட்டுவோமானால் சாலையினுடைய பராமரிப்பு குறைய வாய்ப்பு உண்டு என்பதால்தான் முடிந்த அளவு நபார்டு வங்கி போன்ற வங்கிகளினுடைய கடனுதவி பெற்று மாநில அரசினுடைய பங்களிப்பைச் செலுத்தி இதுபோன்ற பாலங்கள், உயர்மட்டப் பாலங்களாக கட்டப்படுகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பாலம் நபார்டு வங்கிக்கு அனுப்பியிருக்கிற பட்டியலில் இடம் பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.